**2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் முன்னிலை : திருமதி. ஆர்.ஜானகி.**

**பொருள் எண்.1**

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களது ஜூலை- 2025 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.986/2023/சி1)

**பொருள் எண்.2**

சத்தியமங்கலம் நகராட்சியின் தினசரி நாளங்காடி மற்றும் வாரச்சந்தை வளாகங்கள் அடுத்தடுத்து அமையப் பெற்றுள்ளன. இரண்டு அங்காடிகளுக்கும் இடையே தடுப்பு ஏதும் இல்லாத காரணத்தால் இரு பகுதி வியாபாரிகளுக்கும் தொழில் போட்டி காரணமாக பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதால், தனியாக தடுப்புச் சுவர் மற்றும் கேட் அமைத்து இருபகுதியையும் பிரித்து அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்கு அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 19.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதி 2025-26 இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.548/2022/இ1

**பொருள் எண்.3**

சத்தியமங்கலம் நகராட்சியின் பேருந்து நிலையத்தின் கிழக்கு புறமாக உள்ள சிறுநீர் கழிப்பிடத்திலிருந்து வடக்கு நோக்கி செல்லும் சாக்கடை போதுமான சரிவு இல்லாமல் கழிவு நீர் தேங்குவதால் பேருந்து நிலைய சுற்றுச் சுவர் வழியாக தனியார் இடத்திற்கு கழிவு நீர் செல்வதால் அதனை சீரமைக்க வேண்டியுள்ளது. அருகாமையில் உள்ள சிறுநீர் கழிப்பறையின் தரைஓடு பதிக்கப்பட்ட சரிவு உள்புறமாக அமைக்கப்படாமல் வெளிப்புறமாக அமைக்கப்பட்டுள்ளதையும் மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்கு உத்தேசமாக ரூ.2.00இலட்சம் செலவாகும். இந்த செலவனத்தை நகராட்சி வருவாய் நிதி 2025-26 இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.548/2022/இ1

**பொருள் எண்.4**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ராஜீவ் நகர் பூங்காவில் கழிப்பறை வசதி இல்லாததால் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு கழிப்பறை வசதி ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பூங்காவில் ஒரு இருக்கை கழிவறை மற்றும் அதற்கான தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் அதற்கு ரூ.1.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2025-2026 இல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

❖ மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.548/2022/இ1

**பொருள் எண்.5**

15வது மத்திய நிதிக்குழு மானியம் 2025-26 (TIED GRANT) ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கு 16.07.2025 ஆம் தேதியன்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. எனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி இல்லாததால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அனுமதி பெற்று 04.08.2025 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாவட்ட அளவில் தினமணி தினசரி செய்தி தாளில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டமைக்கு Graphic Arts Industries, Coimbatore என்ற நிறுவனம் பட்டியல் தொகை ரூ.10,752/- ஐ வழங்க கோரியுள்ளார். எனவே, இத்தொகையினை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு 2025-26 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

❖ மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 985/2025/இ1

**பொருள் எண்.6**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN36 X 8111 தற்போது பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே அனைத்து ஆயில் சர்வீஸ் , ஏசி சரிசெய்தல் , டயர் புதிதாக மாற்றுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இப்பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.95,000/- ஐ 2025- 2026 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

❖ மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 2252/2025/இ1

**பொருள் எண்.7**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பண்ணாரி செல்லும் சாலையில் கோம்புப்பள்ளம் பழைய பாலத்தில் புதிய 5 மின் விளக்குகள் பொருத்த வேண்டியுள்ளது. அதற்கு புதியதாக 2 மின்கம்பங்கள் அமைக்கவும், தெரு விளக்கு மின்சார லைன் அமைத்து புதியதாக 5 LED 20 வாட்ஸ் விளக்குகள் வாங்கி பொருத்தவும் மின் கம்பத்திற்கான கட்டண தொகை உள்பட உத்தேச செலவினம் ரூ.90,000/- செலவாகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2025-26 இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- ❖ மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 548/2022/இ1

**பொருள் எண்.8**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் ஆகிய இரண்டு தலைமை நீரேற்று நிலையங்களில் இருந்து ரங்கசமுத்திரம், கட்டபொம்மன் நகர் மற்றும் திருவள்ளுவர் திடல் ஆகிய உயர்மட்ட மேல்நிலை தொட்டிகள் மூலமாக பொதுமக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 105லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில்அவ்வப்போது ஏற்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செப்டம்பர் 2025 முதல் மேற்கொள்ள ஆகும் உத்தேசமாக ரூ9.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2025-26ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- ❖ மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 548/2022/இ1

**பொருள் எண்.9**

**அ)** அரசாணை (நிலை) எண்.10 நாள்.23.1.2023 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப,1) துறை இல் இந்நகராட்சி பொறியியல் பிரிவில் அடிப்படை பணியாளர்களுக்கான பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்நகராட்சியில் இரண்டு தலைமை நீரேற்று நிலையங்கள், மூன்று மேல்நிலைத்தொட்டிகள் மற்றும் சின்டெக்ஸ் டேங்குகள் அமைய பெற்றுள்ளது. மேற்கண்ட அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் தினசரி குடிநீர் விநியோகம் செய்ய மின் மோட்டார்கள் இயக்க மின் பணியாளர், குழாய் திறப்பாளர், குடிநீர் கட்டணம் வசூல் செய்ய நான்கு காலாண்டுகள் கேட்பு எழுப்ப கனிணி இயக்குநர் ஆகிய பணியாளர்கள் தேவைப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21787/2021/ EA2 நாள்.02.10.2021 இன்படி கீழ்கண்டவாறு பணியிடங்கள் இருக்க வேண்டும்.

| வ.எண். | பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தலைமை நீரேற்று நிலையம் - மின் பணியாளர் மற்றும் உதவியாளர்- இயக்குதலும், பேணுதலும். 6 X2 | 12 நெ |
| 2 | தலைமை நீரேற்று நிலையம் - மின் பணியாளர் மற்றும் உதவியாளர்- ஆற்று நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் 6 X2 | 12 நெ |
| 3 | மேல்நிலைத்தொட்டி இயக்குபவர் மற்றும் உதவியாளர் - 3 X3 | 9 நெ |

மேற்கண்ட பணியிடங்கள் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. ஆனால் தற்பொழுது மேல்நிலைத்தொட்டி இயக்குபவர் மற்றும் உதவியாளர் - 2 நபர்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலைய பராமரிப்பாளர்கள்-1 நபர் மட்டுமே உள்ளார்கள். எனவே, குடிநீர் தினசரி விநியோக பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட பணியிடங்ளுக்கு வெளி முகமை மூலம் பணியாளர்களை நியமனம் செய்து கொள்ளவும்.

ஆ) சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் இரண்டு ஈப்பு வாகனம் அலுவலக பயன்பாட்டிற்கும், ஒன்று நகர் மன்ற தலைவர் பயன்பாட்டிற்கும் மற்றும் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டேங்கர் லாரி பயன்பாட்டில் உள்ளது. இந்த இரண்டு ஈப்பு வாகனங்கள் மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு ஆகிய இடங்களுக்கு கலாந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள பிரிவு அலுவலர் சென்று வருகிறார்கள். மேலும், பாதாள சாக்கடை திட்டப்பணிகள், சாலை பணிகள், மழைநீர் வடிகால் பணிகள் நகராட்சி பகுதி முழுவதும் கவனிக்கவும், குடிநீர் விநியோக பணிகள் மேலாய்வு செய்யவும், இந்நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஸ்கார்பியோ வாகனம் அலுவலக பயன்பாட்டில் உள்ளது. தற்போது இந்நகராட்சியில் ஒரு ஈப்பு வாகன ஒட்டுநர் மட்டுமே உள்ளனர். குடிநீர் டேங்கர் லாரி ஒட்டுநர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றுள்ளார். எனவே, ஒட்டுநர் இல்லாததால் அலுவலக பணிகள் மற்றும் குடிநீர் விநியோக பணிகள் தங்கு தடையின்றி செயல்படுத்துவும், கீழ்கண்ட பணியிடங்ளுக்கு வெளி முகமை மூலம் பணியாளர்களை நியமனம் கொள்ளவும்.

| வ. எண் | பணியிடம் | தேவைப்படும் பணியாளர் (வெளி ஆட்கள்) |
|---|---|---|
| 1 | குழாய் திறப்பாளர் மற்றும் உதவியாளர்கள் (குடிநீர் பராமரிப்பு பணிகள்) | 10 நபர்கள் |

போதிய பணியாளர்கள் இல்லாமல் குடிநீர் விநியோக பணிகள் தொய்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, பொதுமக்கள் குடிநீர் விநியோக நலன் கருதி மேற்கண்ட பணியிடங்களுக்கான பணியாளர்களை வெளி கொணர்வு முகமை ஆட்கள் (Outsourcing) முறையில் பணிகள் மேற்கொள்ள 8/2025 முதல் 01/2026 வரை ஆறு மாதத்திற்கு தோராய உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

❖ மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 992/2024/இ1

**பொருள் எண்.10**

சத்தியமங்கலம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் 2025-26 இன்கீழ் கோவிந்தராஜபுரம் வீதி -3 (061026R346), ஜல்லிகுலி வீதி (061024R398), எக்ஸ்டன்சன் வீதி - 6 (061025R345), எக்ஸ்டன்சன் வீதி - 4 (061025R352), ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 2332/2025/பி1, நாள்.19.06.2025 இல் நிர்வாக அனுமதி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | நீளம் கிலோ மீட்டர் | மதிப்பீட்டு தொகை. ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கோவிந்தராஜபுரம் வீதி -3 (061026R346), ஜல்லிகுலி வீதி (061024R398), எக்ஸ்டன்சன் வீதி - 6 (061025R345), எக்ஸ்டன்சன் வீதி - 4 (061025R352), ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் | 1.109 | 60.00 |

மேற்கண்ட பணிக்கு 16.07.2025 இல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க ண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.S.K.Construction , Erode |
| 2 | திருவாளர்.Peepy Ventures , Erode. |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதி இல்லாததால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டது. மேலும் பணியானது திட்டப்பணி ஆதலால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அனுமதி கடித ந.க.எண்.2332/2024/பி1 நாள்.22.07.2025 இன்படி குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி 04.08.2025 ஆம் தேதி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு.C.P.கோபாலகிருஷ்ணன்<br>சென்னிமலை<br>ஈரோடு |
| 2 | திருவாளர்.VBN பில்டர்ஸ்<br>திருப்பூர். |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்திருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு 08.08.2025 அன்று விலை விவரங்கள் அடங்கிய உரைகள் திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளனர்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.C.P.கோபாலகிருஷ்ணன்<br>சென்னிமலை<br>ஈரோடு | 47,78,251.04 | 0.03 %<br>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர்.VBN பில்டர்ஸ்<br>திருப்பூர். | 48,28,655.00 | 1.03 %<br>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட கூடுதல் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியனது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழங்கியுள்ள திரு.C.P.கோபாலகிருஷ்ணன், சென்னிமலை, ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.985/2025/இ1

**பொருள் எண்.11**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியும், எதிர் வரும் மழை காலத்தினை கருத்தில் கொண்டு மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் (2025-2026) ஓராண்டுக்கு பொது சுகாதார பிரிவுக்கு தேவையான அபேட், பைரத்திரம், மற்றும் BT திரவம், அல்லது பவுடர் ஆகிய பொருட்களை TAMILNADU MEDICAL SERVICES CORPORATION என்னும் நிறுவனத்தின் அங்கீகராம் பெற்ற நிறுவனமான ஆதித்யா ஏஜென்சீஸ் என்ற நிறுவனத்திடம் நேரடி கொள்முதல் செய்திட வேண்டி அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ..2,25,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

- மன்றம் அனுமதிக்கலாம்.
- பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1863/25/எச்.1

**பொருள் எண்.12**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணியாற்றி வரும் துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், தூய்மை பணியாளர்களுக்கும் பொது பிரிவு அலுவலக உதவியாளர்

மற்றும் பொறியாளர் பிரிவு பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதியுள்ள பணியாளர்களுக்கு 2025-2026 ஆம் ஆண்டு வருடாந்திர சீருடை துணிகள் மற்றும் காலணிகள் வழங்க தமிழ்நாடு அரசு நிறுவனமான கோ -ஆப் டெக்ஸ் நிறுவனத்தில் மற்றும் காலணிகளை காதி கிராப்ட் நிறுவனத்தில் கொள்முதல் செய்திடவும் மற்றும் பணியாளர்களுக்கு தையல் கூலி வழங்கவும் அதற்கான உத்தேச செலவு ரூ. 4.00.000/-திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

- மன்றம் அனுமதிக்கலாம்.
- பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2211/2017/எச்1

**பொருள் எண்.13**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 27 வார்டுகள் உள்ள தெருக்களில் இருபுறம் செடி கொடிகளை அகற்றும் பணி செய்திட வேண்டி பொது சுகாதார பிரிவு பணியாளர்களுக்கு தேவையான 3 புல்வெட்டும் இயந்திரம் வழங்க தொகை ரூ.75,000/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டமைக்கு 19.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் பட்டியல் படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்த்தாரர்பெயர் | தொகைரூ/- |
|---|---|---|
| 1 | Thiru.SRI AMMAN VIVASAYA KARUVIKAL & ELECTRICALS KARATTUR ROAD SATHY- 2 | 21,280/- |
| 2 | Thiru.SRI LAKSHMI AGRO 0,MYSORE TRUNK ROAD SATHY- 2 | 21,535/- |

மேற்காணும் குறைவானஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.SRI Amman Vivasaya Karuvikal & Electricals என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு :

- மன்றம் அனுமதிக்கலாம்.
- பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1843/2025/எச்1

**பொருள் எண்.14**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பில் உள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண் G.O.MS No.116 நாள் 23.11.2017 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை இன்படி பள்ளிகளில் 16 பணியாளர்களை வெளியாட்கள் மூலம் அமர்த்திட அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.34,90,000/- நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற் கண்ட பள்ளி கழிப்பறைகளை சுத்தம் செய்து தரும் பணிக்கு 13.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

Name of work: Selection of service provider/Agency/ Contractor/Company for School Toilet Maintenance Activities in Sathyamangalam Municipality for 01.09.2025 To 31.08.2026 One year

Estimate Amount :Rs.30,00,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | M/s. LD Manpower Solutions ground floor No.1270/A, Water Falls Road, Sathvachari phase2, Vellore-632009 | 589/- Per Day |
| 2 | M/s.Kay Yes Construction -4/17 Krishnapuram Village senjil post, kapadi, veloore-632200 | 591/- Per Day |

மேற்கண்ட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. LD Man power Solutions நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

- மன்றம் அனுமதிக்கலாம்.
- பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1350/2023/எச்1

**பொருள் எண்.15**

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் W.P.NO.4627/2014 வழக்கிற்கு கருத்துரு வழங்குமாறு சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.B. ஆனந்த் அவர்களிடம் 23 .06. 2025 இல் கோரப்பட்டதற்கிணங்க மேற்படி கருத்துருவினை 13.07.2025 இல் அனுப்பி வைத்துள்ளார். அதற்கான கட்டணம் ரூ. 5000/- ஐ வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி கருத்துரு பெறப்பட்டமைக்கான கட்டணம் ரூ.5000/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.913/2025/எப்1

**பொருள் எண்.16**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3984/2013/பி1 நாள்.08.08.2025 தேதிய கடிதத்தின்படி தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள்(வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) விதிகள்-2015 ன்படி விற்பனை மண்டலம் (Vending Zone/ Non vending Zone) தேர்வு செய்து விற்பனை கட்டணம் (Vending Fee) நிர்ணயம் செய்து நகர விற்பனை குழு (Town Vending Committee) ஒப்புதல் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் நகராட்சியில் நகர விற்பனைக் குழு கூட்டம் 30.07.2025 இல் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி விற்பனை மண்டலங்கள் தேர்வு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ.எண். | இடம் | வார்டு |
|---|---|---|
| 1 | திப்புசுல்தான்ரோடு | 2,3,4,6,8 |
| 2 | மைசூர் டிரங் ரோடு (SPS பெட்ரோல் பங்கிலிருந்து SRT கார்னர் வரை) | 23,27 |
| 3 | அத்தாணி ரோடு (அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இருந்து நகராட்சி எல்லை வரை ) | 11 |

**பகுதி நேர விற்பனை மண்டலம் (Partly Vending Zone)**

| வ.எண். | இடம் | வார்டு |
|---|---|---|
| 1 | மைசூர் டிரங் ரோடு (மணிக்கூண்டிலிருந்து கோம்புபள்ளம் வரை) | 1,18,19,22 |
| 2 | கோபிரோடு (மைசூர்டிரங்ரோடு ஜங்ஷன் முதல் நகராட்சி எல்லை வரை) | 23 |
| 3 | கண்ணிகா பரமேஸ்வரி கோயில் வீதி | 18,22 |

**தடை செய்யப்பட்ட விற்பனை மண்டலம் (Non Vending Zone)**

| வ.எண். | இடம் | வார்டு |
|---|---|---|
| 1 | அத்தாணி ரோடு, நெடுஞ்சாலை –துறை அலுவலகம் முன்புறம் (ஈஸ்வரன் கோயிலிருந்து வடக்குப்பேட்டை திப்புசுல்தான் ரோடு சந்திப்பு வரை) | 11 |
| 2 | நகராட்சி அலுவலகம், வட்டாச்சியர் (Taluk Office) அலுவலகம், நீதிமன்ற வளாகம் ஆகிய பகுதிகள் | 23 |
| 3 | அத்தாணி ரோடு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 11 |

மேற்கண்டவாறு உள்ள விற்பனை மண்டலம், பகுதி நேர விற்பனை மண்டலம் , தடைசெய்யப்பட்ட விற்பனை மண்டலம் ஆகியவற்றை தேர்வு செய்யப்பட்ட இடங்கள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2731/2014/எப்1

**பொருள் எண்.17**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3984/2013/பி1 நாள்.08.08.2025 நகராட்சிகளில் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள்(வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) விதிகள்-2015 ன்படி விற்பனை மண்டலம் (Vending Zone/ Non vending Zone) தேர்வு செய்து

விற்பனை கட்டணம் (Vending Fee) நிர்ணயம் செய்து நகர விற்பனை குழு (Town Vending Committee) ஒப்புதல் பெற வேண்டும் என்றும், மேலும் 01.10.2025. முதல் வருவாய் பிரிவு மூலம் விற்பனை கட்டணம் (Vending Fee) வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கான, சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணைவிதிகள்- 2018, விதி எண் (6) உப விதி (1)ன் படி, சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சிக்கு அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அதற்கான விற்பனை கட்டணம் விவரம் குறித்த அறிக்கை ஈரோடு மாவட்ட அரசிதழில் 28.09.2020ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 28.09.2023 உடன் மூன்றாண்டுக்குள் முடிவடைவதாலும் மேற்படி விற்பனை கட்டணத்தினை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்பதாலும் புதியதாக திருத்தி அமைக்கப்பட்ட விற்பனை கட்டணத்தினை நகர்மன்ற தீர்மானம் எண்.636 நாள்.31.01.2024 இன்படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தினை ரத்து செய்தும், தற்போதைய விற்பனை கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணத்தை (Maintenance Charges under clause (1) shell not be less then Rs.50/- and more than Rs.100/- month/ half year/ Year) நிர்ணயம் செய்யவும், நிர்ணயம் செய்யப்படும் விற்பனை கட்டணத்தினை 01.10.2025. முதல் வருவாய் பிரிவு மூலம் வசூல் செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனைக் கட்டணம் (ஒரு வருடத்திற்கு) | பராமரிப்பு கட்டணம்(ஒரு வருடத்திற்கு) (குறைந்தபட்சம்) |
|---|---|---|---|---|
| 1 | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | ரூ. 750/- | ரூ.100./ |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | ரூ. 1500/- | ரூ.100./ |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | ரூ. 3500/- | ரூ.100./ |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | ரூ. 375/- | ரூ.100./ |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | ரூ. 750/- | ரூ.100./ |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | ரூ. 1500/- | ரூ.100./ |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | ரூ. 750/- | ரூ.100./ |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | ரூ. 1500/- | ரூ.100./ |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | ரூ. 3000/- | ரூ.100./ |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | ரூ. 375/- | ரூ.100./ |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | ரூ. 750/- | ரூ.100./ |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | ரூ. 1500/- | ரூ.100./ |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைச்சுமை) | - | ரூ. 250/- | ரூ.100./ |

**அலுவலகக் குறிப்பு**

- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2731 / 2014 / எப் 1)

**பொருள் எண்.18**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வார்டுஎண்.11 அத்தாணி ரோட்டில் அமைந்துள்ள வார சந்தையினை புதியதாக கட்டுமான பணிகள் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. அதற்கு முன்பாக புதியதாக கட்டப்பட்டு வரும் செவ்வாய் கிழமை தோறும் கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஒப்படைக்கும் தேதி முதல் 3 ஆண்டு காலத்திற்கு, முன்னதாகவே பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்ற தீர்மானம் எண்.1012 நாள்.30.07.2025 இன்படி அனுமதி பெறப்பட்டது. அதன்படி வாரசசந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 20.08.2025 ஆம் தேதி கோரப்பட்ட ஏல இனத்தில் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு வரப்பெற்றது. அதில் ஒரு ஒப்பந்தப்புள்ளியில் அசல் வங்கி வரைவோலை இணைத்து வரப்படாததால் அதனை நிராகரிப்பு செய்யப்பட்டது. ஒரு ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டதில் திரு,நாச்சிமுத்து த,பெ ராமசாமி கவுண்டர் என்பவர் ஆண்டிற்கு (ஆட்கூலி உட்பட) ரூ.6,60,100/- க்கு GST நீங்கலாக கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட உயர்த்தபட்ச ஆண்டு வாடகையினை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**வாரசந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்,**

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பழைய ஆண்டு வாடகை (ஆண்டிற்கு) (GST உட்பட) ரூ. | உதவிப்பொறியாளர் மதிப்பீடு (ஆண்டிற்கு) (GST இல்லாமல்) ரூ. | தற்போதைய ஒப்பந்தப்புள்ளி கோரிய உரிமத்தொகை (ஆண்டிற்கு) (GST இல்லாமல் ) ரூ. | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.நாச்சிமுத்து த/பெ.ராமசாமி கவுண்டர் | 5,12,663/- | 5,50,000/- | 6,60,100/- | ஒப்படைக்கும் தேதி முதல் 3 ஆண்டு காலத்திற்கு மட்டும் |

**அலுவலகக் குறிப்பு**

- சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.11 அத்தாணி ரோட்டில் புதிதாக கட்டப்பட்ட வரும் வாரச்சந்தை கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால், வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு முன்தாகவே அரசு ஆணை எண்.181 மற்றும் 66 இன் படியும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு எண்ணிக்கை வரப்பெற்றது. இதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி அசல் வங்கிவரைவோலை இணைக்கப்படாததால் நிராகரிக்கப்பட்டது. ஒரு ஒப்பந்தப்புள்ளி ஆண்டிற்கு ஆட்கூலி உட்பட ரூ.6,60,100/-க்கு கோரியுள்ளார். மேற்கண்ட ஆண்டு வாடகையானது சென்ற பழைய வாடகை மற்றும் நகராட்சி உதவி பொறியாளர் மதிப்பீட்டினை விட கூடுதலாக கோரப்பட்டுள்ளதால், இதில் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் வரப்பெற்றுள்ளது. மீண்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு யாரும் முன்வருவதாக தெரியவில்லை. எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட ஆண்டு வாடகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**பொருள் எண்.19**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிதாக கட்டப்பட்டு வரும் செவ்வாய்கிழமை தோறும் கூடும் வாரச்சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பழைய பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் , கச்சேரி வீதி சத்திரம் பகுதியில் உள்ள வணிக வளாக கடைகள், புதியபேருந்து நிலைய வணிக வளாக கடைகளுக்கான மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.08.2025 அன்று கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட உரிம இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற உயர்ந்தபட்ச மாத வாடகையினை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | ஏலதாரரின் பெயர் | சென்ற மாத வாடகை | தற்போது ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட வாடகை | உரிமக்காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய வணிக வாளக கடை எண்.22 | திரு.ச.பா.சிபி, த/பெ. பால்ராஜ் | ரூ.5000/- | ரூ.5050/- | ஒப்படைக்கப்பட்ட தேதி முதல் 3 ஆண்டுகள் வரை |

**அலுவலகக் குறிப்பு**

- மேற்கண்ட உரிமம் இனம் ஏற்கனவே 30 முறைக்கு மேல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் 20.08.2025ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியில் திரு.ச.பா.சிபி, த/பெ. பால்ராஜ் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.5050/-க்கு கோரியுள்ளார். இது சென்ற மாத வாடகயை காட்டிலும் கூடுதலாகும். மேல்தள கடைகளுக்கு குழு மதிப்பு ரூ.3500/- என நிர்ணயம் செய்யப்பட்டதினை விட கூடுதலாக உள்ளதால், மேற்கண்ட உரிமத்தினை அரசாணை எண்.92 மற்றும் 66 இன் படி பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**பொருள் எண்.20**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிகளில் உள்ள 103ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் மூலம் பொதுமக்கள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கும் மற்றும் கழிப்பிட பயன்பாட்டிற்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மோட்டார்கள், அவற்றின் ஸ்டார்ட்டர்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகள் ஆகியவற்றை அவ்வப்போது சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தடையில்லாமல் தண்ணீர் விநியோகம் செய்யவும், மின்மோட்டார் மற்றும் அதனை சார்ந்த பராமரிப்பு பணிகள் செப்டம்பர் 2025 முதல் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.90இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2025-26ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.548/2022/இ1

இடம் : சத்தியமங்கலம்
தேதி : 22.08.2025

**நகர்மன்றத்தலைவர்**
**சத்தியமங்கலம் நகராட்சி**